முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.1.2026) பொதுப்பணித் துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு, கிழக்கு கடற்கரை சாலையில் 37.99 ஏக்கர் நிலப்பரப்பில் 525 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுவரும் உலகத்தரம் வாய்ந்த கலைஞர் பன்னாட்டு மாநாடு மையத்தின் மாதிரி வரைபடத்தினைப் பார்வையிட்டு, கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி தி.சினேகா, பொதுப்பணித் துறை முதன்மை தலைமை பொறியாளர் எஸ். மணிவண்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (19.01.2026), திரு.வி.க.நகர் மண்டலம், பெரம்பூர், மாதவரம் நெடுஞ்சாலை, பள்ளிச் சாலை சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 11ஆம் வகுப்பு பயிலும் 604 மாணவியருக்கு மிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் க. கற்பகம், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி புனிதவதி எத்திராஜன், முதன்மைக் கல்வி அலுவலர் எம்.கபீர், உதவி கல்வி அலுவலர்கள் தணிகைவேலு, முனிராமையா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

பெரம்பூர், சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில்

604 மாணவியருக்கு மிதிவண்டிகள் - 846 மாணவியர்களுக்கு மாலை நேர சிற்றுண்டி பயிர் வகைகள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்!

சென்னை, ஜன.20- முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று (19.01.2026) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு திரு.வி.க.நகர் மண்டலம், பெரம்பூர், மாதவரம் நெடுஞ்சாலை, பள்ளிச் சாலை சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் 11ஆம் வகுப்பு பயிலும் 604 மாணவியருக்கு மிதிவண்டிகளை வழங்கினார்.

தொடர்ந்து, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் அரசு பொதுத் தேர்வு எழுதும் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு மாலை நேர சிறப்பு வகுப்புகளுக்கான சிற்றுண்டி பயிர் வகையினை வழங்கினார்.

இந்நிகழ்வில் மேயர் அவர்கள் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருவதோடு, படி படி என்று ஒவ்வொரு நிகழ்வுகளிலும் மாணவர்களுக்கு படிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து வருகிறார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி, வடசென்னை பகுதிக்குட்பட்ட பகுதிகளில் அரசின் திட்டங்களை பொதுமக்களுக்கு சேர்த்து, ஓய்வின்றி மக்கள் நலனே தன் நலனாக பணியாற்றி வரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் நல்ஆலோசனையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியருக்கு அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் ஒவ்வொரு ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கல்வித் துறையின் சார்பில் மேயர் அவர்களின் அறிவிப்பின் வாயிலாக, மாணவர்களுக்கு விலையில்லா சீருடை, காலணிகள், 12ஆம் வகுப்பில் அதிகம் மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை, மாணவர்களுக்கு விளையாட்டை ஊக்கப்படுத்தும் விதமாக தேசிய, மாநில அளவில் பங்கேற்கும் மாணவர்களுக்கு பயணப்படி, உணவுப்படி ஊக்கத்தொகை வழங்கப்படு கிறது. அனைத்துப் பள்ளிகளிலும் விளையாட்டு உபகரணப் பொருட்கள், மாணவர்களுக்கு சுத்திகரிக்கப் பட்ட குடிநீர் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வசதிகளை அனைத்தையும் மாணவ, மாணவியர்கள் பயன்படுத்தி சிறந்த முறையில் கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் 35 சென்னை மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 46 உயர்நிலைப் பள்ளிகள் என மொத்தம் 81 பள்ளிகளில் 10 ஆம் வகுப்பில் 7,268 மாணாக்கர்களும் 12ஆம் வகுப்பில் 5,290 மாணாக்கர்களும் என மொத்தம் 12,558 மாணாக்கர்கள் பயில்கின்றனர். இம்மாணாக்கர்கள் மார்ச் 2026-ல் அரசு பொதுத் தேர்வினை எதிர்கொள்ள ஏதுவாக திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை மாலை நேர சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. மாணவர்கள் சோர்வடையாமல் இருந்திட மாலை நேரத்தில் சிற்றுண்டி வகைகள் கருப்பு கடலை, வெள்ளை கடலை, பச்சைப் பட்டாணி, வெள்ளை பட்டாணி, வேர்க்கடலை மற்றும் பச்சைப் பயிறு என இவற்றில் ஏதேனும் ஒன்று மாணாக்கர்களுக்கு சுவையாகவும் மற்றும் சத்துள்ளதாகவும் வழங்கப்படுகிறது.

அவ்வாறாக, இப்பள்ளியில் 10 ஆம் வகுப்பு பயிலும் 330 மாணவியர், 12ஆம் வகுப்பு பயிலும் 516 மாணவியர் என மொத்தம் 846 மாணவியருக்கு மாலை நேர சிற்றுண்டி பயிர் வகைகள் இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்படவுள்ளது. இவ்வாறாக, சென்னைப் பள்ளியில் பயிலும் மாணாக்கர்களின் நல்ன் கருதியும் அவர்களின் தேவைகளை அறிந்தும் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் ஒவ்வொரு திட்டங் களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டங்களை மாணாக்கர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் க. கற்பகம், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி புனிதவதி எத்திராஜன், முதன்மைக் கல்வி அலுவலர் எம்.கபீர், உதவி கல்வி அலுவலர்கள் தணிகைவேலு, முனிராமையா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

ஆவடி தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில்

ரூ.27 லட்சம் மதிப்பீட்டில் 6 இடங்களில் புதிய மின்மாற்றிகள்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் துவக்கி வைத்தார்!

திருவள்ளூர் ஜன. 20- திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிக்கு உட்பட்ட ஆவடி மாநகராட்சி ஒரு சில பகுதிகளில் வீடு கட்டி குடியேறி வருவதால் அப்பகுதியில் குறைந்த மின்னழுத்தம் காரணமாக பொதுமக்கள் அவதிப்பட்டு வந்தனர் இதை கருத்தில் கொண்டு மின்சாரத் துறை அதிகாரிகளுக்கு புதிய மின் மாற்றி அமைக்க உத்தரவிட்டார்.

ஆவடி தொகுதிக்கு உட்பட்ட பட்டாபிராம் உப கோட்டத்திற்கு உட்பட்ட, வார்டு 40 தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு மசூதி தெரு, வார்டு 41 தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, வார்டு 33 ஜோதி நகர் அண்ணனூர், வார்டு 31 மூன்று நகர், என்.எஸ்.கே தெரு, வார்டு 1 பட்டாபிராம் அண்ணாநகர் வள்ளுவர் தெரு மற்றும் வார்டு 2 கணேஷ் நகர் ஆகிய பகுதிகளில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலன் துறை அமைச்சர் சா.மு. நாசர், 6 புதிய மின் மாற்றிகளை, மக்கள் பயன் பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டது.

இதனை தொடந்து ஆவடி மாநகராட்சி காமராஜர் நகர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, திருமுல்லைவாயில் எட்டியம்மன் நகர் அரசு மேல்நிலைப் பள்ளி, தண்டுரை அண்ணா அரசு மேல் நிலைப்பள்ளி ஆவடி சத்தியமூர்த்தி நகர் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர் மாணவிகளுக்கு 497 தமிழ்நாடு அரசு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கி சிறப்புரையாற்றினார்

இந்நிகழ்ச்சியில் ஆவடி மேயர் கு.உதயகுமார், மாநகராட்சி ஆணையர் சரண்யா, மண்டல குழு தலைவர்கள் ஜி.ராஜேந்திரன், அமுதா பேபி சேகர், என்.ஜோதிலட்சுமி, தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட துணை செயலாளர் எஸ்.ஜெயபாலன், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன்பிரகாஷ், பகுதி செயலாளர்கள், ஜி.நாராயணபிரசாத், பேபிசேகர், பொன்விஜயன், கவுன்சிலர்கள் சத்யா கோ.ரவி, கோவிந்தராஜன் (எ)மணி, பார்த்த சாரதி, ஷன்முக சுந்தர், வி.மனோகர், வே.ஹரி, வெங்கடேசன், ஜசய்யா, துளசிங்கம்(எ) சக்திவேல், ஜெயப்பிரியா சரவணன், ராஜேந்திரன், மற்றும் கழக நிர்வாகிகள் மின்சார துறை அதிகாரிகள் ஆசிரியர்கள் பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக திராவிட பொங்கல் நிகழ்ச்சி நல்லூர் ஊராட்சி, வீரபாண்டிநகர் அருகில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பொங்கல் வைத்து மகளிர்களுக்கு பொங்கல் பரிசுகளை வழங்கினார். உடன் நா.பரசுராமன், எஸ்.விவேகானந்தன், ஆர்.சி.சிவசங்கரன், க.பிரபு மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை வீரபாண்டிநகர் கிளை பொறுப்பாளர் என்.மணிகண்டன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (19.01.2026), திரு.வி.க.நகர் மண்டலம், பெரம்பூர், மாதவரம் நெடுஞ்சாலை, பள்ளிச் சாலை சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 11ஆம் வகுப்பு பயிலும் 604 மாணவியருக்கு மிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் க. கற்பகம், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி புனிதவதி எத்திராஜன், முதன்மைக் கல்வி அலுவலர் எம்.கபீர், உதவி கல்வி அலுவலர்கள் தணிகைவேலு, முனிராமையா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

உலக விருந்தினர் வியக்கும் வண்ணம் அனைத்து வசதிகளோடும்

விறுவிறுவென உருப்பெற்று வரும் கலைஞர் பன்னாட்டு மாநாடு மையம்!

வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, ஜன.20- செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காட்டில் அமைக்கப்பட்டுவரும் “கலைஞர் பன்னாட்டு மாநாடு மையம்“ கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு மேற்கொண்ட பிறகு வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

Kalaignar International Convention Centre: where global standards converge to fulfil the expectations of a global city.

தெற்காசியாவின் தொழில் மையமாகவும், இந்தியாவின் பண்பாட்டுத் தலைநகராகவும் விளங்கும் நம் சென்னையில், உலகத் தரத்தில் ஒரு மாநாடு மையம் தேவை எனத் தொழில் அமைப்புகள், கலைஞர்கள் உள்ளிட்ட பலரும் வைத்த கோரிக்கையினை ஏற்று “கலைஞர் பன்னாட்டு மாநாட்டு மையம்” அமைக்கும் அறிவிப்பை வெளியிட்டோம்.

உலக விருந்தினர் வியக்கும் வண்ணம், அனைத்து வசதிகளோடும் விறுவிறுவென உருப்பெற்று வரும் கலைஞர் பன்னாட்டு மாநாட்டு மையப் பணிகளைப் பார்வையிட்டேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சிக்குட்பட்ட காமராஜர் நகர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி திருமுல்லைவாயில் எட்டியம்மன் நகர், சத்தியமூர்த்தி நகர் தண்டுரை அரசு மேல்நிலைப் பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு 497 மாணவ மாணவிகளுக்கு மிதிவண்டிகள் வழங்கினார். உடன் ஆவடி மேயர் கு.உதயகுமார், மாநகராட்சி ஆணையர் சரண்யா, மண்டல குழு தலைவர்கள் ஜி.ராஜேந்திரன், அமுதா பேபிசேகர், என்.ஜோதிலட்சுமி, மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் வட்டக் கழக செயலாளர் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும்

பேறுசார் குழந்தைகள் நலத்திட்ட பகுதி நேர தூய்மைப் பணியாளர்களுக்கு தொகுப்பூதியம் உயர்வு!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆணைகளை வழங்கினார்!

சென்னை, ஜன.20- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (19.01.2026) சென்னை, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக கூட்டரங்கில், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் பேறுசார் குழந்தைகள் நலத் திட்ட (RCH) பகுதி நேர தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் தொகுப்பூதியம் ரூ.1,500/- லிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.7,376/- ஆக உயர்த்தி அதற்கான ஆணைகளை வழங்கி விழா பேருரையாற்றினார்.

பிறகு அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:--

ஊதிய உயர்வு ஆணை

தமிழ்நாட்டின் மருத்துவக்கட்டமைப்புகளுள் ஒன்றான ஆரம்ப சுகாதார நிலையங்களில் 24 மணி நேரமும் பிரசவ சேவைகள் வழங்கும் பொருட்டு, பேறுசார் குழந்தைகள் நலத்திட்டம் தேசிய ஊரக நலத்திட்டத்தின்கீழ், நோயாளர் நலச்சங்கம் மூலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவ நேரங்களில் அறையினை தூய்மையாக வைத்துக் கொள்ள செவிலியர்களுக்கு உதவியாக இருக்க ஆரம்ப சுகாதார நிலைய தூய்மை பணியினை மேற்கொள்ள RCH தூய்மை பணியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

ஏறத்தாழ 2002-ஆம் ஆண்டு பணி நியமனம் செய்யப்பட்ட இவர்களுக்கு மாதம் ஊதியம் ரூ.500/- என்று இருந்தது. 4 ஆண்டுகள் தொடர்ச்சியாக பணியாற்றியவர்களுக்கு மாதம் ரூ.1,000/- என்று உயர்த்தப்பட்டது. 7 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர்களுக்கு ரூ.1,500/- என்று உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு, இப்பணியாளர்களின் வாழ்வில் ஒரு விடியலை ஏற்படுத்தும் பொருட்டு, கோவிட் காலங்களில் பணியாற்றிய பேறுசார் குழந்தைகள் நலத்திட்ட தூய்மை பணியாளர்கள் 938 பேர் தேர்வு செய்து அவர்கள் மாவட்ட சுகாதார நலவாழ்வு சங்கத்தின் மூலம் ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள தற்காலிக பல்நோக்கு மருத்துவப் பணியாளர்களாக பணியமர்த்தப்பட்டார்கள்.

அவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாவட்ட நலவாழ்வு சங்கம் மூலமாக ஊதியம் என்கின்ற வகையில் ஏறக்குறைய ரூ.27,000/- வரை ஊதியம் பெற்று வருகிறார்கள். அதில் மீதமிருக்கும் 1,575 பேருக்கு இன்று ஊதியம் உயர்த்தி வழங்கும் ஆணைகள் தரப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு ஏப்ரலில் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் அதிமுகவைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் ரூ.1,500/- சம்பளத்தில் இருக்கின்ற இவர்களுக்கு ஊதியம் உயர்த்தி தர வேண்டும் என்று சொன்னார். அப்போது இந்த தகவலை அவர்களுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அவர்கள் ஆட்சிக் காலத்தில் இருந்த ஊதியம் ரூ.500/- ரூ.1,000/ மற்றும் ரூ.1,500/- என்று இருந்தது.

இந்த நிலையில் இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு 938 பேருக்கு மாவட்ட நலவாழ்வு சங்கம் மூலம் ஏறக்குறைய ரூ.27,000/- வரை சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அந்தப் பணிகள் காலியாகின்றபோது அவர்களின் கல்வித்தகுதிக்கேற்ப கோவிட் காலங்களில் பணியாற்றியவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று சொன்னோம். அதேபோன்று இன்னொன்று ரூ.1,500/- ஊதியம் கடந்து அவர்களுக்கு மிக விரைவில் அவர்களது பட்டியலை சரிபார்த்து ரூ.5,000/-ஆக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த வகையில் தொடர்ந்து அவர்களுக்கு எந்தந்த காலக்கட்டத்தில் பணியாற்றி வருகிறார்கள் என்கின்ற விவரங்களை பெறப்பட்டு யார் யாருக்கு கல்வித்தகுதி, வயது தகுதி போன்ற விவரங்கள் பெறப்பட்டு அந்த வகையில் 1575 பேர் மீதமிருக்கிறார்கள்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, அவர்களுக்கு மாதம் ஊதியம் ரூ.5,000/- வழங்கப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் ரூ.5,000/- மட்டுமல்லாமல் முதலமைச்சர் அவர்கள் ரூ.1,500/-யை தேசிய நலவாழ்வு குழுமம் மூலமாக வழங்கப்படுகிறது என்றாலும் மாநில அரசின் சார்பில் ரூ.5,876/-கூடுதலாக வழங்கப்பட்டு அவர்களுக்கு மாதம் ரூ.7,376/- வழங்க ஆணைகள் இன்று வழங்கப்பட்டுள்ளது.

அவர்கள் எதிர்பாத்து வந்தது ரூ.5,000/- இது 10 நாட்களுக்கு முன்பாக இதே அரங்கில் அறிவிக்கப்பட்டது. அவர்களுக்கு இன்னொரு இன்ப அதிர்ச்சி கிடைக்கும் என்று அறிவித்தோம். அந்த வகையில் அவர்களுக்கு ரூ.5,000/- என்று அறிவிக்கப்பட்டு ரூ.7,376/- என்று உயர்த்தி வழங்கப்பட்ட ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று அவர்களது கல்வித்தகுதி மற்றும் பல விவரங்களை கேட்டு பெற உள்ளோம், அதன் பிறகு தமிழ்நாட்டில் உள்ள 38 வருவாய் மாவட்டங்களில் பணியிடங்கள் காலியாகின்ற போது கோவிட் காலங்களில் பணியாற்றியவர்கள் என்கின்ற வகையிலும், ஏறத்தாழ 20 ஆண்டுகள் பணிநியமனம் செய்யப்பட்டவர்கள் என்கின்ற வகையிலும் அவர்களுக்கு முன்னுரிமை தந்து மாவட்ட நலவாழ்வு சங்கம் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் பணிகளில் அவர்களுக்கு நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு. சோமசுந்தரம், கூடுதல் இயக்குநர்கள் மரு.சம்பத், மரு.சேரன், மரு.வினய், சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொது செயலாளர் டாக்டர். ஜி. ஆர் .ரவீந்திரநாத் மற்றும் பேறுசார் குழந்தைகள் நலத்திட்ட பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், கீழ்ப்பாக்கம், சாஸ்திரி நகரில் பழுதடைந்த, பயன்பாட்டில் இல்லாத கட்டிடத்தை இடித்துவிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் புதிய கட்டடம் கட்டுவதற்கானத் திட்டப் பணி குறித்து ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின்போது சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.